*கவனிக்க.- 2019.04.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2120 - 2019 අප්‍රේල් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.18

*2120 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 850 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


849 - B81515 - 5,403 (2019/04)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சின் கீழ் மாகாணக் கைத்தொழில் திணைக்களத்தில் முதன்மை அரைக்கைவினை சேவைத் தரத்திலேயுள்ள மின்சார தொழில்நுட்பவியலாளர் பதிவிக்காக விண்ணப்பம் கோரல்

மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சின் கீழ் மாகாணக் கைத்தொழில் திணைக்களத்தில் முதன்மை அரைக்கைவினை சேவைத் தரத்திலேயுள்ள தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிட எண்ணிக்கை : 01

**1. சேவை நிபந்தனைகள் :**

1.1 இச்சேவை நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளம் உடனானது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நீங்கள் பங்குதாரர்களாக வேண்டும். (உமக்கு உரித்தான இளைப்பாற்றுச் சம்பள முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்பட வேண்டும்.)

1.2 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் 03 வருட கால வினைத் திறன் தடை காண் காலத்திற்கு உடன்பட வேண்டும்.

1.3 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் விதிகளுக்கும், நிதிக் கட்டுப்பாடுகளுக்கும், மேல் மாகாண சபை அரசாங்க சேவை மேலாண்மை நடைமுறைக் கோவைக்கும், மேல் மாகாண சபை நிதிச் சட்ட திட்டங்களுக்கும், காலத்துக்குக் காலம் மேல் மாகாண சபை கௌரவ ஆளுநர் அவர்களினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்கும் அமைச்சினதும் மற்றும் திணைக்களத்தினதும் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும்.

1.4 அரச மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்காக அ.நி.சு. 01/2014 இனால் விதிக்கப்படும் விதிகளுக்கு ஏற்ப குறிப்பிடப்பட்ட தரத்தில் ஏனைய அரச மொழிகளிலும் தேர்ச்சி பெறல் வேண்டும்.

**2. சம்பள அளவுத்திட்டம், வயதெல்லை**

2.1 வருடாந்த மொத்த சம்பளம் - (அ.நி.சு. 03/2016 க்கு ஏற்ப, PL 2 - 2016)

2.2 சம்பள அளவு - ரூபா 25, 250 - 10X270 - 10X300 - 10X330 - 12X350 - ரூபா 38, 450

2.3 வயதெல்லை : 2019.05.18 ஆந் திகதிக்கு,
குறைந்த வயது - 18 வருடம்
அதிகூடிய வயது - 45 வருடங்களுக்கு மேற்படாமல்

**3. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 02 பாடங்களுக்கு திறமைச் சித்தி உடன் ஆறு பாடங்களில் சித்தி (ஒரே தடவையில் குறைந்தது 05 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் அவசியம்.)

3.2 தொழில் தகைமைகள்

மின்சார தொழில்நுட்பவியல் சம்பந்தமான NVQ இரண்டாம் (02) தரத்தைப் பெற்றிருத்தல் (அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.)

3.3 அனுபவம்

இத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இயந்திர மற்றும் மின்சார பராமரிப்பு பற்றிய 01 வருட அனுபவம் இருத்தல் மற்றும் மின் பராமரிப்பு, வேல்டின், வாயு சீராக்கல், இயந்திர பராமரிப்பு, நீர்ப் பம்பி போன்றவற்றில் சாதாரண அறிவு இருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**4. வேறு தகைமைகள் :**

4.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 03 வருடங்கள் மேல் மாகாண எல்லைக்குள் நிரந்தரமாக வசித்து வந்தவராக இருத்தல் வேண்டும் என்பதனை நிரூபித்தல் வேண்டும்.

4.3 நல்லொழுக்கத்துடன் இருத்தல் வேண்டும்.

இப் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தேவைப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதிக்கு அத் தகைமைகள் எல்லாவற்றையும் கொண்டிருத்தல் அவசியம்.

4.4 தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மேல் மாகாணத்தில் எந்தவொரு பகுதியிலும் வேலை செய்யத் தயாராக இருத்தல் அவசியம் என்பதோடு, நல்ல மனோபலத்துடனும், தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு முறை :**

திறந்த போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்களுக்காக நியமிக்கப்படுவார்கள்.

5.1 எழுத்துமூல பரீட்சை

கீழ்க் காணப்படும் விடயங்களின் கீழ் எழுத்துமூலப் பரீட்சையொன்று நடைபெறும்.

| தொ. இல. | கேள்விப் பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியெய்த தேவையான புள்ளிகளின் வீதம் |
|---|---|---|---|---|
| 01 | விடயத்தொடர்பு அறிவு - (50 கேள்விகளுடன் பல்தேர்வு வினாப்பத்திரம்) | 01 மணி | 100 | 40% |
| 02 | பொருத்தச் சோதனை - (50 கேள்விகளுடன் பல்தேர்வு வினாப்பத்திரம்) | 01 மணி | 100 | 40% |

5.2 பரீட்சைக்கான பாடத்திட்டம்

| தொ. இல. | வினாப் பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01. | துறைசார் அறிவு | 1. மின் விஞ்ஞான கோட்பாடுகள்<br>• மின் அலகு மற்றும் கணக்கிடுதல்<br>• மின்சார சின்னங்கள்<br>• மின் இயந்திரங்களின் செயற்பாடு<br>• எயார் வேல்டிங் நடவடிக்கை<br>• காற்றுச் சீரமைப்பு அறிவு<br><br>2. கட்டிட மின் நிறுவல்<br>• பல்வேறு வரிசை வகைகள்<br>• மாடிக் கட்டடங்களில் மின் நிறுவல்<br>• வீடுகளில் மின் நிறுவல்<br>• நூல், அங்குலம், அடி மற்றும் மெட்ரிக் அளவுகள்<br>• தொழிற்சாலைகளில் மின் நிறுவல்<br>• வயரின் முறைகள் (தற்காலிக மற்றும் நிரந்தர மின் சர்க்கிட்களில் கொங்கிரீட் மீது மர நிலத்தடி கேபிள் இழுத்தல்.<br><br>3. மூன்று கட்ட மின்சாரம்<br>• மூன்று கட்ட மின்சார கேபிள் இணைப்பு முறை<br>• உபயோகிக்கும் கருவிகள் (மின் மாணி போன்றவை)<br>• மூன்று கட்ட மின்சாரத்திற்கு உபயோகிக்கும் உபகரணங்கள்<br><br>4. ஏனையவை<br>• வேல்டிங் ட்ரான்ஸ்போர்மர்<br>• லேத் மெஷின்<br>• பல்வேறு மரவேலை செய்யும் இயந்திரங்களின் பராமரிப்பும் மின்சார பராமரிப்பு பற்றிய அறிவு, கட்டிடங்களின் உள்ளே வேறுபடுத்தல், உள்நாட்டு தொலைபேசி அமைப்புகள் மற்றும் தடுப்பு பராமரிப்புகள், நீர்க்குழாய்கள் பொருத்துதல் மற்றும் நீர் வழங்கல் அமைப்பு பராமரிப்பு பற்றிய அறிவு |
| 02. | பொருத்தச் சோதனை | அபேட்சகர்களின் மனோ ஆற்றல், சரியான கருத்தறிதல், தர்க்க ரீதியாக புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல், மற்றும் கணித அறிவு ஆகியவற்றை மதிப்பிடுதல் |

**6. பரீட்சைக் கட்டணம் :**

9.1 ரூபா 600 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் மேல் மாகாண சபை வருமான பட்டியல் 20.03.02.99 இற்கு வரவு வைக்கப்படுவதன் பொருட்டு அண்மையில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் அ. ப. 1 பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறு ஏதேனும் நிறுவனங்களுக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு, ஏதேனும் காரணமொன்றினால் பரீட்சைக்குத் தோற்றாமல் அல்லது விண்ணபத்தை மீளப்பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் பரீட்சைக்குத் தோற்றம் பெறுவதற்கு தகுதி இல்லை என உணரும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக் கட்டணமோ அல்லது அதன் ஒரு பகுதியோ திருப்பி வழங்கப்பட மாட்டாது. மேலும், இப்பரீட்சைக்கான கட்டணத்தை வேறும் ஏதேனும் பரீட்சைக்கு மாற்றஞ் செய்யவோ இயலாது.

**7. விசேட காரணி :**

விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல்களுக்கு ஏற்புடைத்தான காரணிகள் அல்லது இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத காரணிகள் சம்பந்தமாக மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சுச் செயலாளரின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

**8. விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பும் முறை :**

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் இறுதியிலிருக்கும் மாதிரிக்கு ஏற்ப A4 அளவினதான தாள் ஒன்றின் ஒரு பக்கத்தைப் பயன்படுத்தி தாயரித்து தமது விண்ணப்பங்களை 2019.05.18 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மாகாண, தெருக்கள், போக்குவரத்து அமைச்சு, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற தகவல் அறிவிக்கப்பட மாட்டாது.

9. அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணியொருவர்/கிராம அலுவலர்/முப்படை அதிகாரி அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தரொருவர், வருடத்திற்கு ரூ. 240,360 இற்கு குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரசாங்க/மாகாண சேவையிலுள்ள அதிகாரியொருவரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

கே. சம்பா என். பெரேரா,
செயலாளர்,
மாகாண தெருக்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சு,
மேல் மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சின் கீழ் மாகாணக் கைத்தொழில் திணைக்களத்தில் முதன்மை அரைக்கைவினை சேவைத் தரத்திலேயுள்ள வேலையாட்கள் பதவிக்காக ஆட்சேர்த்தல் - 2019**

(அலுவலக உபயோகத்துக்காக)

01. (i) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் : ..........................................

(ii) முழுப் பெயர் : ..........................................

02. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ..........................................

03. நிரந்தர முகவரி மற்றும் தொ. பே. இல. : ..........................................

(i) நிரந்தர வதிவு மாவட்டம் : (கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

கொழும்பு ☐ கம்பஹா ☐ களுத்துறை ☐

(ii) 2019.05.18 ஆந் திகதிக்கு உரிய மாவட்டத்தில் நிரந்தர வதிவு

வருடங்கள் .................... மாதங்கள் .................... நாட்கள் ....................

(iii) தொ. பே. இல. :

தனிப்பட்ட ............................ உத்தியோக ......................................

04. ஆண்/பெண் : (கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

பெண் ☐ ஆண் ☐

05. விவாகமானவரா? இல்லையா? : (கூட்டினுள் ✓ புள்ளடியிடுக)

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

06. பிறந்த திகதி :

I. 2019.05.18 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

II. இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா? அல்லது பதிவினாலா? ..........................................

07. கல்வித் தகைமைகள் :

முதலாம் அமர்வு

க. பொ. த. (சா.த.) பரீட்சை

வருடம் : ........... பரீட்சைச் சுட்டெண்: ..........

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |

இரண்டாம் அமர்வு

வருடம் : ........... பரீட்சைச் சுட்டெண்: ..........

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |

08. நீங்கள் ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றிருப்பீராயின் அது சம்பந்தமான விபரங்களைத் தரவும் : ..........................................................................................................................

09. மேற் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியெனவும் உண்மையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், தெரிந்தெடுக் கப்பட்டதன் பின்னர் தெரியவரின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என நான் நன்கு அறிவேன்.

................................,

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (அவசியமற்ற வசனங்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு. .......................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும், அவர் ................................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :

கையொப்பம் :

பதவி மற்றும் பதவி இலச்சினை :

திகதி :

(இந்த உறுதிசெய்தல், அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி யொருவர்/முப்படை அதிகாரி அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தரொருவர், வருடத்திற்கு ரூபா 240, 360 இற்கு குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரசாங்க மாகாண சேவையிலுள்ள அதிகாரியொரு வரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

04 - 653